திரு. கே. விஞயகம் : தலைவர் அவர்களே, இந்தப் பாதை போடுவதால் 7 லட்சம் ரூபாய் செலவாகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். நிதி நிலைமை சரியாக இல்லையென்று சொல்வது நியாயமாக இருந்தாலும், டெல்லியிலிருந்து 17 கோடி ரூபாயை வாங்கினீர்களே, அதை வைத்துக்கொண்டு பஞ்ச நிவாரண வேலையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் சிபாரிசு செய்தும், அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் சொல்லியும், பஞ்ச நிவாரணக் கமிஷன் அதை சேர்த்துக்கொள்ளாமல் விட்டுவிட்டதே, அதற்கு ஏதாவது அரசியல் காரணம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதற்கு அரசியல் காரணம் எதுவும் இல்லை. அப்படி அரசியல் காரணம் எதுவாகிலும் இருந்திருக்குமாஞல், கனம் உறுப்பினர் அவர்களுடைய தொகுதியான திருத்தணி தொகுதிக்கு வறட்சி நிவாரணத் தொகை அதிக அளவில் ஒதுக்கப்பட்டிருக்காதே என்பதையும் உறுப்பினர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே, அரசியல் காரணம் எதுவும் இல்லை.

அறந்தாங்கி பேரூராட்சி

*** 406 விஞ—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி பேரூராட்சியை நகரசபையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அம்மாதிரி மகஜர் ஏதாவது பேரூராட்சியிலிருந்து வந்ததா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் தலைமைச் செயலகத்தில் இல்லை. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர், ஊர் வளர்ச்சி இயக்குனர், நகராட்சி இயக்குனர் ஆகியோர்களிடம் இதுபற்றி கேட்கப்பட்டது. அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லையென்று அறிவித்துவிட்டனர். மேலும் அண்மையில் அறந்தாங்கி பேரூராட்சி மன்றம், தன் 31—12—1969-ம் தேதிய 200-ம் எண் தீர்மானத்தில் தற்பொழுது நகராட்சியாக மாற்றத் தேவையில்லையென்று தீர்மானிக்கப்பட்டது என்று தீர்மானித்துள்ளது.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, நகரப் பஞ்சாயத்துக்களை நகராட்சியாக உயர்த்துவதற்குத் தேவையான மக்கள் தொகை, வருமானம் இருந்தும் பல நகரப் பஞ்சாயத்துக்கள் நகராட்சியாக உயர்த்தப்படவில்லையே, அடுத்த ஏப்ரலிலிருந்தாவது அவைகளை உயர்த்தும் திட்டம் அமுலுக்கு வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்களுடைய கூற்று தவருனதாகும். ஓராண்டு வருமானத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நகராட்சியாக மாற்றுவது அல்ல. மூன்று ஆண்டுகளில் கிடைக்கும் நிலையான வருமானத்தை அடிப்படையாக வைத்துத்தான் நகரப் பஞ்சாயத்துக்கள் நகராட்சியாக மாற்றப்படுகின்றன. தற்போது

1970 மார்ச் 16]

வருகின்றவைகளை மட்டும் வைத்துக் கணக்கிட்டால், ஆண்டுக்காண்டு நகராட்சிகளின் எண்ணிக்கை அதிகமாகிவிடும். கிராம வளர்ச்சித்துறையில் இயக்குநர் அவர்களின் குறிப்பு பெறப்பட்டு, தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு, உரியகாலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Fire accident in Ennore Thermal Power Station

* 407 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there was a fire accident in the Ennore Thermal Power Station on 13th September 1969;

(b) if so, the reasons therefor and the action taken thereon; and

(c) the extent of loss incurred?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) எண்ணூர் அனல் மின்சார நிலையத்தில் 13—9—1969 அன்று பிற்பகல் ஒரு சிறு தீ விபத்து ஏற்பட்டது. கட்டுமான உருக்குப் பணியில் உருக்குப் பாளங்களை ஆக்சி-அசிடிலின் வாயுவைக் கொண்டு வெட்டுகையில் உருகிய இரும்புத்துண்டு ஒன்று யூனிட் ஸ்விட்சி கியரில் வைக்கப்பட்டிருந்த தேவதாரு மரத்தாலான பெட்டியின் மீது விழுந்ததனால் அந்த தீ விபத்து நிகழ்ந்தது. அத் தீ விபத்து சிறியதேயாகும். அது உடனடியாக அணைக்கப்பட்டுவிட்டது.

(உ) தீ உடனடியாக அணைக்கப்பட்டுவிட்டதால், கருவிகளுக்குச் சேதம் எதும் ஏற்படவில்லை.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, எண்ணூர் அனல் மின்சார நிலையத்திலே ஏற்பட்ட தீ விபத்தை உடனடியாக நிறுத்த முடியாத அளவிற்கு தீயணைக்கும் என்ஜின் பக்கத்திலே இல்லாமல் வெகுதூரத்திலேயிருந்து அழைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? தீயணைக்கும் நிலையத்தை பக்கத்திலே நிறுவ முயற்சி எடுத்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, உண்மை அல்ல.

Beggar Homes

* 408 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Government have any proposal to increase the number of beggar homes in Tamil Nadu; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: (அ) & (இ) ஆம். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் இத்திட்டம் பற்றி அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. உரிய நடவடிக்கை பற்றி ஆராய தமிழக முதல்வர் விரைவில் ஒரு கூட்டம் கூட்டுவதற்கு திட்டமிட்டுள்ளார்.